சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 09.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **126/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-4 |
| சாட்சியின் பெயர் | : | ராஜிவ்காந்தி |
| தந்தை பெயர் | : | மாணிக்கம் |
| கிராமம் | : | பைங்காநாடு |
| தாலுக்கா | : | மன்னார்குடி |
| தொழில் | : | ஓட்டுநர் |
| வயது | : | 39 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்கள் நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா-1 கஜேந்திரன்

எனது உறவினர் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்று நானும் மது அருந்ததான் சென்றேன் என்றால் சரிதான். நான் அங்கு மது வாங்க சென்றிருந்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு 7.30 மணி என்றால் சரிதான். இரவு நேரம் என்பதால் இருட்டாக இருந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் ஓரே கூட்டமாகவும், சத்தமாகவும் இருந்தது என்றால் சரிதான். சத்தம் கேட்டு போய் பார்த்தபோது அ.சா-1 கஜேந்திரன் கீழே விழுந்து கிடந்தார். நீங்கள் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, என்று சொன்னால் சரியல்ல. அ.சா-1 கஜேந்திரன் எனது உறவினர் என்பவதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த
நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு
பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த
போது சாட்சி சரியென்று என் முன்பாக
கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.09 18:12:20 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.